ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## முதல் வகுப்பு

(மூன்றாம் பருவம்)

ஆசிரியர்
**குரும்பை உலகநாதன்**
மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு
**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்
48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# முகவுரை

"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ("CCE METHOD") நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# ஆசிரியர்க்கு ....

## 1. என் நினைவில் .........



தமிழ் மொழியைப் பொறுத்தவரை மாணவர்களுக்கு எழுத்துகளை அறிமுகப்படுத்துவதே முக்கியமான செயல்பாடு ஆகும். அவ்வாறான எழுத்துகளில் உயிர், மெய், உயிர்மெய் ஆகியவற்றை ஐயமின்றி கற்று தெளியவும் தாம் முந்தய பருவத்தில் கற்ற எழுத்துகளை நினைவில் கொண்டு வந்து முன்நிறுத்தவும் இச்செயல்பாடு உதவுகிறது.

## 2. உயிர்மெய்எழுத்துகள் அறிமுகம் :



தமிழ்மொழியின் சிறப்புகளில் ஒன்று என்னவென்றால் எழுத்துகளும், ஒலிகளும் மாறுவதில்லை. ஆனால் மற்ற மொழிகள் அவ்வாறு இல்லை. எனவே அனைத்து தமிழ் எழுத்துகளுக்கும் உரிய சரியான ஒலிப்பு முறையைக் கற்றுக் கொடுக்கும் பொருட்டாக இச்செயல்பாடு அமைந்துள்ளது. மாணவர்களுக்கு கற்றல் கடினமாகாமல் இருப்பதற்கு ஏதுவாக கோட்டுப்படங்கள், படக்கதைகள், நிகழ்வுகள் ஆகியவற்றைக் கொண்டு, எழுத்துகளை எளிமையாக அறிமுகப்படுத்தியுள்ளோம்.



## 3. இணைத்துச் சொல்வோம்

"உயிரும் மெய்யும் சேர்ந்ததே உயிர்மெய்" என்பதே அறிந்து பல முறை பயிற்சி செய்ய மாணவர்களுக்கு புரியும் வகையில் எழுத்துகள் இனிமையாக தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

## 4. எழுத்தை எடுப்பேன்; பெயரைச் சொல்வேன்:



ஒவ்வோர் எழுத்தையும் வரிசையாகக் கூறும் மாணவர்கள் அவற்றை சொற்களில் காணும் பொழுதோ, தனி எழுத்தாகக் கூறும் பொழுதோ தவறாகக் கூறுகின்றனர். அதற்கு என்ன காரணம்? எழுத்துகளின் முறையான ஒலி வடிவம் தெரியாததாலேயே ஆகும். அவற்றை சரியாக ஒலித்தும், உணர்ந்தும் அறிந்து கொள்ள வலுவூட்டும் வகையில் இப்பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது.

## 5. படிப்போம்; எழுதுவோம்.




படித்தல் செயலுக்கு ஒலிவடிவமும் எழுதுதல் செயலுக்கு வரி வடிவமும் இன்றியமையாதது ஆகும். எழுத்துகளை ஒலிக்க கற்ற பின் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல் வேண்டும். ஒரெழுத்து, ஈரெழுத்து என்று வளர்நிலையில் எழுத, படிக்க பயிற்சி அளிக்கும் வகையில் ''சொல்லக்கேட்டு எழுதுதல், என்னால் முடியும்'' ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தானாகவே இவற்றை செய்வதால் தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

### 6. பாடல்கள்



குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த செயல்பாடுகளில் முதன்மையானதாக பாடல்களே அமைந்துள்ளன. அவர்களின் மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் கூட்டி, ஆடிப்பாடி மகிழ்ந்து, வகுப்பறைச் சூழலை அவர்களுக்கு மிகவும் வகையினதாக மாற்றி தரும் கருவியாக பாடல்கள் இனிய ஓசை நயத்துடன் அமைக்கப் பட்டுள்ளது.

### 7. புதிர்கள்



குழந்தைகள் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் உண்மைத் தன்மை பற்றி அறிந்து கொள்வதிலும், ஒரு செய்திக்குள் பொதிந்திருக்கும் கருத்துகளை தோண்டித் துருவி ஆராய்வதிலும் ஆர்வமுள்ளவர்கள் ஆவர். அவர்களின் சிந்திக்கும் திறன், புதியனவற்றை ஆராய்ந்து அறியும் திறன், ஆகியவற்றைத் தூண்டும் வகையில் “ படத்திற்குள் ஒளிந்திருக்கும் எழுத்துகளை கண்டறிதல், கண்ணாடியில் எழுத்துகளை கண்டறிதல்” ஆகிய செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 8. கதை கேட்டல் (படித்தல்)



பண்புகளை விளக்கிடும் ஊடகமாக, அறங்களின் களஞ்சியமாக, உற்சாகம் தரும் விதமாக, குழந்தைகளின் பொழுது போக்கினுள் ஒன்றாக கதை இருப்பதால் மொழிப்பாடம் கற்பிப்பதில் கதைகளை பயன்படுத்தி அவற்றை கேட்கவும், சொல்லவும் செய்யலாம். அதற்கான வழிகாட்டியாக நம் கதைகள் புத்தகத்தில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.



### 9. வந்த பாதை :

மாணவர்கள் தாம் இப்பருவம் முழுவதும் பயின்றவைகளை பசுமரத்தாணி போல் மீண்டும் ஞாபகப்படுத்தி பதிய வைத்துக் கொள்ள இப்பயிற்சிகள் உதவுகின்றன. ‘‘எழுத்துக்களை கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்” போன்ற பயிற்சிகள் தரமாக கொடுக்கப்பட்டுள்ளன.

கற்றுக்கொள்வதற்கான ஆர்வத்தையும் ஏராளமான வழிமுறைகளையும் குழந்தைகள் தங்களிடத்தே கொண்டிருக்கிறார்கள். அவ்வழிமுறைகளின் வழியே கற்றல் மாணவர்களைச் சென்றடைய இப்பாடநூல் முயற்சி செய்திருக்கிறது. கற்றுக் கொடுப்பதற்கு ஏராளமான வழிமுறைகளோடு நாமும் வகுப்பறைக்குள் செல்வோம். குழந்தைகளை வரவேற்போம்.

# பொருளடக்கம்


| வ. எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | என் நினைவில் | 7 |
| 2. | இனிப்பு செய்யலாமா? | 9 |
| 3. | திசைகள் அறிவோம் | 21 |
| 4. | ஊஞ்சல் ஆடலாமா? | 22 |
| 5. | என்ன வண்ணம் வேண்டும்? | 29 |
| 6. | தமிழ் மாதங்கள் | 31 |
| 7. | மைதிலியின் ஒரு வாரம் | 34 |
| 8. | தோரணம் செய்வோமா! | 36 |
| 9. | வடிவங்கள் | 50 |
| 10. | பயணம் போகலாம் | 53 |
| 11. | இளையார் ஆத்திசூடி | 55 |
| 12. | வந்த பாதை | 57 |

# 1. என் நினைவில்



## உலா போகலாம்

நிலா பாரு நிலா பாரு
நீல வானிலே
நாம் நடக்க நாம் நடக்க
கூட வந்திடுமே

வளரும் தேயும் வளரும் தேயும்
வருத்தம் ஏதுமில்லை
வானில் மேகம் மறைத்த போதும்
வாடி நின்றதில்லை

நிலா போல நிலா போல
உலா போகலாம்
நீல வானில் நீல வானில்
நீந்தி மகிழலாம்

## பொருந்தாததைக் கண்டுபிடித்து வட்டமிடுக.



## கண்டுபிடித்து இணைப்பேன்.



# 2. இனிப்பு செய்யலாமா?



நண்பர்கள் இனிப்பு செய்யக் கூடினர்



கடலை மாவு எடுத்து வருகிறது சேவல்



வெல்லம் சுமந்து வருகிறது கட்டெறும்பு



தேன் எடுத்து வருகிறது தேனீ



நெய் எடுத்து வருகிறது வெட்டுக்கிளி



தேங்காய் எடுத்து வருகிறது சுண்டெலி



இனிப்பு தயார் ஆகிறது



அடடே கடலை உருண்டை விருந்து.
நாமும் சாப்பிடலாமா?

## படமும் சொல்லும்

க் + எ = கெ
ங் + எ = ஙெ
ச் + எ = செ
ஞ் + எ = ஞெ
ட் + எ = டெ
ண் + எ = ணெ
த் + எ = தெ
ந் + எ = நெ
ப் + எ = பெ
ம் + எ = மெ
ய் + எ = யெ
ர் + எ = ரெ
ல் + எ = லெ
வ் + எ = வெ
ழ் + எ = ழெ
ள் + எ = ளெ
ற் + எ = றெ
ன் + எ = னெ


கெண்டி


செடி


கட்டெறும்பு


எண்ணெய்


தென்னை மரம்


நெல்


பெட்டி


மெட்டி


வெட்டுக்கிளி

18
பதினெட்டு

### எழுத்தை எடுப்பேன்; பெயரைச் சொல்வேன்



## எழுத்துகளைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்




### கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்





| | | | |
|---|---|---|---|
| பெ | ட் | டி | வெ |
| செ | ம் | ம | ண் |
| டி | நெ | ல் | ணெ |
| கெ | ண் | டி | ய் |





### படித்துப் பார்ப்போம்



பெயர் : வெ.நெல்சன்
வகுப்பு : முதல் வகுப்பு
முகவரி : 4/12, தெற்குத் தெரு,
செங்கல்பட்டு-18

## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ |
| தெ | நெ | பெ | மெ | யெ | ரெ |
| லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |

## படிப்போம் எழுதுவோம்




## படிப்பேன் வரைவேன்

| | | |
|---|---|---|
| கட்டெறும்பு | | |
| செங்கல் | | |
| மெழுகுவர்த்தி | | |
| பெட்டி | | |



## பெயரை எழுதுவேன்




## இணைத்து எழுதுவேன்

நெ → ற்றி ← வெ

தெ → ப்பம் ← வெ

பெ → ட்டி ← மெ

மெ → ட்டு ← வெ

1. பெரிய 

2.  வயல்

3. அச்சு 



## கண்ணாடி

மெத்தப் பெரிய கண்ணாடி
வீட்டில் என்னிடம் இருக்கிறது
நித்தம் நித்தம் அதன் முன்னால்
நின்றே அழகு பார்த்திடுவேன்

எப்படி எப்படி செய்தாலும்
என்போல் அதுவும் செய்திடுமே
நன்மை செய்தால் நன்மை தான்
நம்மை நாடி வந்திடுமே

- அழ.வள்ளியப்பா

## படமும் சொல்லும்

க் + ஏ = கே

ங் + ஏ = ஙே

ச் + ஏ = சே

ஞ் + ஏ = ஞே

ட் + ஏ = டே

ண் + ஏ = ணே

த் + ஏ = தே

ந் + ஏ = நே

ப் + ஏ = பே

ம் + ஏ = மே

ய் + ஏ = யே

ர் + ஏ = ரே

ல் + ஏ = லே

வ் + ஏ = வே

ழ் + ஏ = ழே

ள் + ஏ = ளே

ற் + ஏ = றே

ன் + ஏ = னே



கேழ்வரகு



சேவல்



தேள்



நேந்திரம் பழம்




பேருந்து



மேகம்



வேடன்



லேகியம்

எழுத்தை எடுப்பேன்; பெயரைச் சொல்வேன்



## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கே | ஙே | சே | ஞே | டே | ணே |
| தே | நே | பே | மே | யே | ரே |
| லே | வே | ழே | ளே | றே | னே |

## படிப்போம் எழுதுவோம்



தேள்
கேள்
சேவகன்
தேங்காய்



வேல்
சேவல்
நேரம்
தேர்



தேனீ
மேகம்
தேக்கு
மேற்கு

## படிப்பேன் வரைவேன்

| | |
|---|---|
| மேகம் | |
| வேல் | |
| கேணி | |
| தேனீ | |



# பெயரை எழுதுவேன்



| மேகம் | சேவல் | தேள் | தேன்கூடு | | | |
|---|---|---|---|---|---|---|

## இணைத்து எழுதுவேன்

மே → ளம், கம்

1. ____________
2. ____________

தே → ன், ள்

1. ____________
2. ____________

வே, தே, நே, சே → ர்

1. ____________
2. ____________
3. ____________
4. ____________

1.  பார் ____________

2.  மாவு ____________

3.  நிறுத்தம் ____________

## கண்ணாடியில் கண்டுபிடிப்பேன்; இணைப்பேன்

கெண்டி

பேருந்து

சேவல்



எறும்பு

வேர்

நெல்

## நிரப்புவேன்









நெல்
வெங்காயம்
கேடயம்
மேம்பாலம்

## வந்தது யார்?

வெல்லம் தேடி கட்டெறும்பு
வந்தது. வண்டு வந்தது.
ஈக்கள் வந்தன.
கிளி வந்தது.
அடுத்து வந்தது யார்?

வண்ணமிட்ட எழுத்துகளை எடுத்து எழுதினால் தெரிந்துவிடும்.

## புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டுவேன்



## சொற்கோபுரம் அமைப்போமா?

சித்து ! பள்ளிக்குப் போ என்றார், அம்மா.

வழியில் சித்து கோபியைச் சந்தித்தான்.

கோபி சித்துவின் பள்ளித் தோழன்.

பள்ளி விட்டதும் பொட்டல் காட்டிற்குப் பட்டம் விடச் சென்றனர்.

அங்கு பொன்வண்டு பறப்பதைக் கண்டு மகிழ்ந்தனர்.

சற்று நேரம் கோலிக்குண்டு விளையாடியபின் வீடு திரும்பினர்.

போ

கட்டங்களில் சரியான எழுத்துக்களைக் கொண்டு நிரப்புக.



நான் ☐☐☐☐ அணிந்திருக்கிறேன்.



காலையில் ☐☐☐☐ சாப்பிட்டேன்.



☐☐☐ மீனைத் தின்கிறது.

## பறக்கலாம் வா!



கண்ணே! வெளியே வா!
எதற்கு அம்மா?
உயரே பறக்கலாம்
எனக்குப் பறக்கத் தெரியாதே
உன் சிறகு வளர்ந்து உள்ளது பார்
அடடே! ஆமாம் அம்மா!
நானும் வருகிறேன் உணவு தேடலாம்
ஐ...மேலே பறக்கிறேன்!

# 3. திசைகள் அறிவோம்




என்னைச் சுற்றி நால்திசையாம்,
எல்லாத் திசையும் நல்திசையாம்
என்ன என்ன அற்புதங்கள்
எண்ணத் தீரா இன்வளங்கள்

சூரியன் உதிக்கும் திசைகிழக்கு,
சுந்தர ஒளிதரும் உலகிற்கு,
வீரியம் குறைந்து மாலையிலே
விழுகிற திசைதான் அம்மேற்கு

உதிக்கிற சூரியன் பார்த்துநில்லு
உன்றன் கைகள் விரித்துநில்லு
அதிசயம், வலக்கை தென்திசையாம்
அடடா, இடக்கை வடதிசையாம்

நான்கு திசைகள் போதாது,
நடுவில் இன்னும் நான்குண்டு,
தேன்கொ ழிக்கும் இவ்வுலகில்
திசைகள் எங்கும் நலமுண்டு

# 4. ஊஞ்சல் ஆடலாமா!

விலங்குகள் ஊஞ்சல் ஆட விரும்பின. யானை ஊஞ்சலை ஆட்டுகிறது.



குதிரை ஊஞ்சல் ஆடுகிறது



கழுதை ஊஞ்சல் ஆடுகிறது



புலி ஊஞ்சல் ஆடுகிறது



ஆமை ஊஞ்சல் ஆடுகிறது



பன்றிக்கு அடிபட்டுள்ளது
எப்படி ஊஞ்சல் ஆடும்?



அட...குரங்கின் உதவியுடன்
பன்றி ஊஞ்சல் ஆடுகிறது

# பெயரைச் சொல்வேன்; எழுத்தை அறிவேன்




டை




தை





மை




ரை




லை




வை




ழை




ணை

## படமும் சொல்லும்

க் + ஐ = கை

ங் + ஐ = ஙை

ச் + ஐ = சை

ஞ் + ஐ = ஞை

ட் + ஐ = டை

ண் + ஐ = ணை

த் + ஐ = தை

ந் + ஐ = நை

ப் + ஐ = பை

ம் + ஐ = மை

ய் + ஐ = யை

ர் + ஐ = ரை

ல் + ஐ = லை

வ் + ஐ = வை

ழ் + ஐ = ழை

ள் + ஐ = ளை

ற் + ஐ = றை

ன் + ஐ = னை


கைவிரல்கள்


மீசை


ஆடை


வீணை


கைப்பை


மைனா


குதிரை


வலை


வைரம்


வாழை


தவளை


பாறை


பானை

## எழுத்துகளைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்

மை | டை | சை | கை | யை




## கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்





| | | | | |
|---|---|---|---|---|
| க | கை | ப் | பை | ச |
| யா | னை | ப | ற | வை |
| மு | ட் | டை | ப | கை |
| மை | மெ | த் | தை | வெ |
| னா | வா | ழை | பா | னை |













## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கை | ஙை | சை | ஞை | டை | ணை |
| தை | நை | பை | மை | யை | ரை |
| லை | வை | ழை | ளை | றை | னை |

## படிப்போம் எழுதுவோம்

அலை
இலை
மலை
சிலை

கடை
வடை
படை
நடை

அத்தை
நத்தை
மெத்தை

பானை
யானை
பூனை
வீணை

காலை வேளை
மாலை வேளை

முல்லை மலர்
வெள்ளை நிலா

## படிப்பேன்; வரைவேன்

| | |
|---|---|
| பானை | |
| குடை | |
| மலை | |
| நத்தை | |



## பெயரை எழுதுவேன்




## இணைத்து எழுதுவேன்

1. மண் 

2.  ஓடு

3. பூ 

## கண்ணாடியில் கண்டுபிடிப்பேன்; இணைப்பேன்





# கலையும் கைவண்ணமும்



தேவையானவை:

1. பிளாஸ்டிசைன் களிமண்
2. பயன்படுத்திய தீக்குச்சிகள்













## வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடித்து வட்டமிடுக.





## 5. என்ன வண்ணம் வேண்டும்?

நீலநிறம் வந்ததாம்,
நிமிர்ந்து நின்னு பார்த்ததாம்,
வாலை ஆட்டும் குருவி யோடு
வானம் வரையச் சொன்னதாம்

சிவப்புநிறம் வந்ததாம்,
சிரிச்சுப் பழகி நின்றதாம்
கவர்ந்தி ழுக்கும் மாலைநேரக்
கதிரை வரையச் சொன்னதாம்

பச்சைநிறம் வந்ததாம்,
பணிந்து வணக்கம் என்றதாம்,
நச்சைச் சுத்தம் செய்யும் இலையை
நன்கு வரையச் சொன்னதாம்

கறுப்புநிறம் வந்ததாம்
கனிந்து நன்கு சிரித்ததாம்
குறுக்கு, நெடுக்கு, பின்னிப்பிணைந்த
கூந்தல் வரையச் சொன்னதாம்

மஞ்சள் நிறம் வந்ததாம்,
தன்மை யாக அணைத்ததாம்,
சிங்க மொன்று சீறிப் பாயும்
சிறப்பை வரையச் சொன்னதாம்

வெள்ளைநிறம் வந்ததாம்,
விரைந்து அருகில் அமர்ந்ததாம்,
உள்ள நிறங்கள் அனைத்தும் எனக்குள்
உண்டு என்று சொன்னதாம்.



# வண்ணங்கள்









சிவப்பு | மஞ்சள் | நீலம்









வெள்ளை | கறுப்பு | பச்சை

# வண்ணம் எழுதுவேன்









## 6. தமிழ் மாதங்கள்

| | | |
|---|---|---|
| 1. சித்திரை | 5. ஆவணி | 9. மார்கழி |
| 2. வைகாசி | 6. புரட்டாசி | 10. தை |
| 3. ஆனி | 7. ஐப்பசி | 11. மாசி |
| 4. ஆடி | 8. கார்த்திகை | 12. பங்குனி |

### நிரப்புவேன்



## கேட்டு எழுதுவேன்

நான் பிறந்த தமிழ் மாதம் ______

கடுமையான வெயில் மாதம் ______ (சித்திரை/ மார்கழி)

பொங்கல் விழா கொண்டாடப்படும் மாதம் ______ (ஆவணி/தை)

## வண்ணம் தீட்டுவேன்



## வரைந்து வண்ணம் தீட்டுவேன்



# விடுபட்ட கட்டங்களை நிரப்புக.







| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஒ | | | |
| | ப | ட் | | | |
| | | ட | | | |
| | | க | | | |
| கா | | ம் | | | |
| | | | | | |
| | | | | | |





















# 7. மைதிலியின் ஒரு வாரம்




தாத்தா கதை சொல்கிறார்




பாட்டி நடித்துக் காட்டுகிறார்




அம்மா மகுடம் செய்கிறார்




அப்பா வாள் வாங்குகிறார்




மாமா உடை தைக்கிறார்




தங்கை கை தட்டுகிறாள்



அத்தை ஒப்பனை செய்கிறார்




மைதிலி நடிக்கிறாள்

## அபியின் உறவினர் பெயர்களை எழுதுவோம்




______________________ ______________________ ______________________

______________________ ______________________ ______________________

## கிழமைகள்

| சித்திரை 20__ | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ்வாய் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியாழன் | 4 | 11 | 18 | 25 | |
| வெள்ளி | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |

நான் பிறந்த கிழமை ______________________

பள்ளியின் வார விடுமுறை நாள் ______________________

வாரத்தின் இறுதி நாள் ______________________

# 8. தோரணம் செய்வோமா!



தோரணம் செய்வோமா
வண்ணத்தாள் வாங்கி வருகிறேன்
அம்மா, கடைக்குப் போய் வண்ணத்தாள் வாங்கி வரட்டுமா
சரி, பொன்மணி போர்வையை தாத்தாவிடம் கொடு
தாத்தா என்ன தேடுகிறீர்கள்
கண்ணாடி தொலைந்துவிட்டது
தாத்தா இதோ உங்கள் கண்ணாடி
கிடைத்து விட்டதா நன்றி
வண்ணத்தாள் கொடுங்கள் ஐயா
இதோ தருகிறேன்
சுவரில் தொங்க விடுவோமா
ம் அழகாக இருக்கும்

# படமும் சொல்லும்

க் + ஒ = கொ

ங் + ஒ = ஙொ

ச் + ஒ = சொ

ஞ் + ஒ = ஞொ

ட் + ஒ = டொ

ண் + ஒ = ணொ

த் + ஒ = தொ

ந் + ஒ = நொ

ப் + ஒ = பொ

ம் + ஒ = மொ

ய் + ஒ = யொ

ர் + ஒ = ரொ

ல் + ஒ = லொ

வ் + ஒ = வொ

ழ் + ஒ = ழொ

ள் + ஒ = ளொ

ற் + ஒ = றொ

ன் + ஒ = னொ



கொக்கு



சொட்டு நீர்



காணொளிக்காட்சி



தொப்பி



நொச்சி



பொங்கல்



மொட்டு



ரொட்டி



வானொலிப்பெட்டி

எழுத்தை எடுப்பேன்;
பெயரைச் சொல்வேன்



## எழுத்துகளைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்




## படிப்போம்




## பாட்டுப் பாடலாம்

மலை யொன்றின் அருகிலே
கதிரொளியும் வந்ததே
குயிலொன்று கூவியதே
எதிரொலியும் கேட்டதே
அவ்வொலியைக் கேட்டுமே
மயில் அங்கு ஆடுதே



## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ |
| தொ | நொ | பொ | மொ | யொ | ரொ |
| லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |

## படிப்போம்; எழுதுவோம்

பொம்மை
பூங்கொத்து
வானொலி
பொன்வண்டு
மீன்தொட்டி
தமிழ்மொழி
தொலைக்காட்சி

## படிப்பேன் வரைவேன்

| | |
|---|---|
| தொடர்வண்டி | |
| மொட்டு | |
| பொன்வண்டு | |
| தொப்பி | |



## இணைத்து எழுதுவேன்

கொ
நொ → டி
பொ

மொ
கொ → ட்டு
சொ

1. பெரிய 

2. மீன் 

3.  வலை

## ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடித்து எழுதுவேன்





# வண்ணத்துப்பூச்சி



தோட்டமெல்லாம் சுற்றிவரும்
வண்ணத்துப்பூச்சி-உன்னைத்
தொட்டுப் பார்க்க வேண்டுமே
வண்ணத்துப்பூச்சி

பட்டுப்போலப் பளபளக்கும்
வண்ணத்துப்பூச்சி
பறக்கும் பூவைப் போலிருக்கும்
வண்ணத்துப்பூச்சி

சின்னப் பாப்பா கேட்கிறேனே
வண்ணத்துப்பூச்சி - நீ
திரும்பி என்னைப் பார்த்திடுவாய்
வண்ணத்துப்பூச்சி.



# படமும் சொல்லும்

க் + ஓ = கோ

ங் + ஓ = ஙோ

ச் + ஓ = சோ

ஞ் + ஓ = ஞோ

ட் + ஓ = டோ

ண் + ஓ = ணோ

த் + ஓ = தோ

ந் + ஓ = நோ

ப் + ஓ = போ

ம் + ஓ = மோ

ய் + ஓ = யோ

ர் + ஓ = ரோ

ல் + ஓ = லோ

வ் + ஓ = வோ

ழ் + ஓ = ழோ

ள் + ஓ = ளோ

ற் + ஓ = றோ

ன் + ஓ = னோ



கோபுரம்



மக்காச்சோளம்



தோட்டம்



நோயாளி



போர்வை



மோதிரம்



அலையோசை



ரோசாப்பூ



உலோகம்

எழுத்தை எடுப்பேன்;
பெயரைச் சொல்வேன்



## எழுத்துகளைக் கண்டுபிடிப்போம்; வட்டமிடுவோம்




## படிப்போம்




## பாட்டொன்று பாடலாம்

கடலோரம் போகலாம்
அலையோசை கேட்கலாம்
நண்டோடு ஓடலாம்
மணலோடு ஆடலாம்



சோலைக்குள்ளே போகலாம்
தென்றலோடு நடக்கலாம்
வண்டோடு பறக்கலாம்
மலர்களோடு சிரிக்கலாம்



## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ | ஙொ | சொ | ஞொ | டொ | ணொ |
| தொ | நொ | பொ | மொ | யொ | ரொ |
| லொ | வொ | ழொ | ளொ | றொ | னொ |

## படிப்போம் எழுதுவோம்

தோசை
சோலை
பெற்றோர்

கோலம்
கோட்டை
போட்டி

கத்தரிக்கோல்
குயிலோசை

கோலாட்டம்
மோர்க்குழம்பு

## படிப்பேன் வரைவேன்

| | | |
|---|---|---|
| சோளக் கதிர் | |  |
| தோரணம் | | |
| மோதிரம் | | |
| கோடரி | | |

# இணைத்து எழுதுவேன்

| | | |
|---|---|---|
| கோ | | |
| | ழி | |
| தோ | | |

| | | |
|---|---|---|
| மோ | | |
| | ர் | |
| போ | | |

| | | |
|---|---|---|
| சோ | | |
| | ழன் | |
| தோ | | |

1.  முட்டை
2. வெள்ளி 
3. கம்பளி 
4. தொங்கும் 

## கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்





| | | | |
|---|---|---|---|
| சோ | று | தோ | கை |
| மோ | தி | ர | ம் |
| கோ | ழி | ண | தோ |
| கோ | ல | ம் | சை |











## கண்ணாடியில் கண்டுபிடிப்பேன்

ம்ஶாகஓ

ஶ்ஷடாஜூ



ஓட்டுபு ப்ளொஷணூ

ம்ளாசோ ச்காக்ம

## நிரப்புவேன்







பொம்மை
கோடரி
தோரணம்
தொலைக்காட்சி



## தோட்டத்திற்கு வந்தது யார்?

முட்டையிலிருந்து வருவேன்;
முற்றத்திலே திரிவேன். நான் யார்?

ஒற்றைக்காலில் நிற்பேன்; குளத்தில்
உணவு தேடுவேன். நான் யார்?

வெள்ளை நிறத்தில் இருப்பேன்;
காற்றிலே பறப்பேன். நான் யார்?.

வட்டத்தில் உள்ள எழுத்துகளை எடுத்து
எழுதினால் தெரிந்துவிடும்.



## ஒளிந்துள்ளவர்கள் யார் யார்?



படத்தில் மறைந்துள்ள பறவைகள் மற்றும் விலங்குகளைப் பெயரிடு.

## படமும் சொல்லும்

- க் + ஔ = கௌ
- ங் + ஔ = ஙௌ
- ச் + ஔ = சௌ
- ஞ் + ஔ = ஞௌ
- ட் + ஔ = டௌ
- ண் + ஔ = ணௌ
- த் + ஔ = தௌ
- ந் + ஔ = நௌ
- ப் + ஔ = பௌ
- ம் + ஔ = மௌ
- ய் + ஔ = யௌ
- ர் + ஔ = ரௌ
- ல் + ஔ = லௌ
- வ் + ஔ = வௌ
- ழ் + ஔ = ழௌ
- ள் + ஔ = ளௌ
- ற் + ஔ = றௌ
- ன் + ஔ = னௌ


கௌதாரி


கௌளி


சௌசௌ


பௌர்ணமி


மௌவல்


வௌவால்

### எழுத்தை எடுப்பேன்; பெயரைச் சொல்வேன்




### எழுத்துகளைக் கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்



## எழுதிப் பழகுவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கௌ | ஙௌ | சௌ | ஞௌ | டௌ | ணௌ |
| தௌ | நௌ | பௌ | மௌ | யௌ | ரௌ |
| லௌ | வௌ | ழௌ | ளௌ | றௌ | னௌ |

## படிப்போம் எழுதுவோம்

பௌர்ணமி

கௌதாரி

வௌவால்

சௌமியா

ரௌத்திரம்

## படிப்பேன் வரைவேன்

| | |
|---|---|
| வௌவால் | |
| கௌதாரி | |
| பௌர்ணமி | |
| மௌவல் | |



# 9. வடிவங்கள்










## வடிவத்தின் பெயரை இணைப்பேன்






முக்கோணம்

சதுரம்

வட்டம்

செவ்வகம்





# காலங்கள் அறிவோம்!



கோடை காலம் வந்தது !
வெயிலும் வாட்டி எடுத்தது !



மாரி காலம் வந்தது !
மழையும் நன்கு பெய்தது !



குளிர் காலம் வந்தது !
குளிர் நடுங்கச் செய்தது!



வசந்த காலம் வந்தது !
மலர்கள் மலர்ந்து மணந்தது !



மலர்களெல்லாம் மலர்ந்ததால்
மனதில் மகிழ்ச்சி பொங்குது !

## வாகனத்தின் வடிவங்களைக் கண்டுபிடிப்பேன்; எழுதுவேன்



### ஒன்றும் பலவும்


சேவல்


சேவல்கள்


மாங்காய்


மாங்காய்கள்


நாய்


நாய்கள்


யானை


யானைகள்


வண்டு


வண்டுகள்





# 10. பயணம் போகலாம்



குரங்கு பொன் வண்டைத்
தொட்டுப் பார்க்க ஆசைப்பட்டது.



பொன் வண்டு பறந்துவிட்டது.
குரங்கு மிதிவண்டியில் செல்கிறது.



பிடிக்க முடியவில்லை. பேருந்தில்
ஏறித் துரத்திச் செல்கிறது.



பிடிக்க முடியவில்லை.
தொடர்வண்டியில் தொடர்கிறது.



பிடிக்க முடியவில்லை. கப்பலில்
சென்று பிடிக்க நினைக்கிறது.



பிடிக்க முடியவில்லை. விடாமல்
வானூர்தியில் தொடர்கிறது.

அடுத்து என்ன நடந்து இருக்கும்? சொல்லுங்கள்

## விடுகதை கேட்பேன்; விடையை எழுதுவேன்



காலால் மிதிக்க
ஓடிடுவேன்;
கையால் பிடிக்க
நின்றிடுவேன்.
நான் யார்?



பறவை போல
பறந்திடுவேன்;
விரைவில் சென்று
சேர்த்திடுவேன்.
நான் யார்?



நீண்ட
வண்டிக்காரன்;
நிறையப்
பெட்டிக்காரன்.
நான் யார்?



நீலக்கடலில்
நீந்திடுவேன்;
நீரில் பாய்ந்து
சென்றிடுவேன்.
நான் யார்?



ஊதல் ஒலிக்க
நின்றிடுவேன்;
ஊரையே ஏற்றிச்
சென்றிடுவேன்.
நான் யார்?

# 11. இளையார் ஆத்திசூடி

- பாரதிதாசன்



ஒற்றுமை வெல்லும்



கல்வி கற்கண்டு



எதையும் ஊன்றிப்பார்



மற்றவர்க்கு உதவி செய்



சமமே அனைவரும்



# இளையார் ஆத்திசூடி

- பாரதிதாசன்



வண்டி பார்த்து நட



தைப்பொங்கல் இனிது



பூச்செடி வளர்த்திடு



வேர்க்க விளையாடு




வெல்லத் தமிழ் பயில்

# பொம்மை





பொம்மை பொம்மை பொம்மை பார்!
புதிய புதிய பொம்மை பார்!
தலையை ஆட்டும் பொம்மை பார்!
தாளம் போடும் பொம்மை பார்!

கையை வீசும் பொம்மை பார்!
கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்!
எனக்குக் கிடைத்த பொம்மை போல்!
எதுவும் இல்லை உலகிலே.









## வண்ணமிட்ட எழுத்துகளை எடுத்து எழுதுவேன்

| | | |
|---|---|---|
| த | வ | ளை |
| மு | ய | ல் |
| ப | ல் | லி |

| | | |
|---|---|---|
| சு | வ | டி |
| வ | ண் | டி |
| க | டு | கு |

| | | |
|---|---|---|
| பூ | த | ம் |
| ப | ட் | டு |
| கு | டு | வை |

| | | |
|---|---|---|
| ம | கு | டி |
| மா | ட | ம் |
| சொ | ம் | பு |

| | | |
|---|---|---|
| பொ | ட் | டு |
| ப | ந் | து |
| வா | த் | து |

| | | |
|---|---|---|
| ப | ழ | ம் |
| ஓ | ட | ம் |
| கு | ள | ம் |

| | | |
|---|---|---|
| தோ | ப் | பு |
| ப | ழ | ம் |
| கா | ளா | ன் |

| | | |
|---|---|---|
| கோ | ப் | பை |
| மா | து | ளை |
| எ | ரு | மை |

## சொல்லிப்பார்ப்போம். குழுவாக்குவோம்

பள்ளி இலை வெள்ளி ஊற்று மலை காற்று

வலை கீற்று புள்ளி வள்ளி நேற்று சிலை

காற்று
கீற்று

## கதை படிப்போம்





இலக்கியா

 எடுத்தாள்

 எடுத்தாள்

 குறுவட்டு எடுத்தாள்

 உருவாக்கினாள்

அட, என்ன இது?



மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள்

## மீன் உருவாக்கலாம்



## பார்த்து மகிழ்வோம்: எழுதி மகிழ்வோம்





படத்தில் எனக்குப் பிடித்தவை...



## ஓசைநயம் அறிக



கல கல வென
குழந்தை சிரிக்கிறது.

கட கட வென்று
வண்டி ஓடுகிறது.





சல சல வென
அருவி கொட்டுகிறது.

சட சட வென
மழை பொழிகிறது.





பட படவென
கை தட்டினர்.

திகு திகுவென
தீ எரிகிறது.





குளு குளுவென்று
காற்று வீசுகிறது

துரு துரு வென
தம்பி பார்க்கிறான்.



### வார்த்தைகளைச் சரியாகப் பொருத்து

| | |
|---|---|
| கல கல | வண்டி |
| சல சல | மழை |
| பட பட | தீ |
| குளு குளு | பாப்பா |
| கட கட | குழந்தை |
| சட சட | அருவி |
| திகு திகு | கை தட்டு |
| துரு துரு | காற்று |



# தமிழ் எழுத்துகள்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## படித்துப் பார்ப்போம்

| | | |
|---|---|---|
| நெடி | - | நொடி |
| செல் | - | சொல் |
| பெய் | - | பொய் |
| மெட்டு | - | மொட்டு |
| தென்னை | - | தொன்னை |
| சேறு | - | சோறு |
| தேடு | - | தோடு |
| சேலை | - | சோலை |
| கேள் | - | கோள் |
| தேள் | - | தோள் |